குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 149/2022

அ.சா. 9

| | | |
|---|---|---|
| பெயர் | : | மருத்துவர் திருமதி.மங்கையற்கரசி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பாலமுருகன் |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | டாக்டர் |
| மதம் | : | |
| வயது | : | *41* |

***1873–ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 22.08.2023***

*(எதிரி ஆஜர்)*

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஒசூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 19.08.2021ம் தேதியன்று நான் அலுவல் மருத்துவராக பணியில்இருந்தபோது காலை 08.35 மணியளவில் சீனிவாஷ் 24 வயது த/பெ ஜெயகிருஷ்ணப்பா என்பவரை அவரது நண்பர் பரத் என்பவர் அழைத்துவந்தார் அவரிடம் விசாரித்தபோது அவர் கடந்த 19.08.2021ம் தேதி காலை 07.45 மணியளவில் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தபோது லாரி மோதியதால் விபத்து ஏற்பட்டதாக கூறினார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. காயம் 1 வலது பக்க தலையில் கிழிந்த காயம் 4 X 0.5 தசையளவு காயம் காணப்பட்டது.

2. காயம் 2 வலது முட்டியில் சிராய்ப்பு காயம்1 X 1 காயம் காணப்பட்டது.

அவருக்கு வெளிப்புற நோயாளியாக சிகிச்சையளிக்கப்பட்டது அவருக்கு ஏற்பட்ட காயங்கள் 1 மற்றும் 2 சாதாரண காயங்கள் என்று காயச்சான்று வழங்கினேன். **(மேற்படி காயச்சான்று அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு

சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

வழக்கு அ.சா.ஆ.3 காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள 1 மற்றும் 2வது காயங்கள் சொற்பகாயங்கள் என்று சான்றளித்துள்ளதாக விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான், விபத்தில் காயமுற்ற நபர் தெரிவித்ததன் அடிப்படையில் தெரிந்துகொண்டேன். பொதுவாக ஒரு நபர் கீழே விழுந்தால்கூட அ.சா.ஆ.3 காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் மேற்படி காயச்சான்றில் குறிப்பிடப்பட்டுள்ள சிராய்ப்பு காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

V AGAVITHAN

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.1

Digitally signed by V AGAVITHAN
Location: HOSUR